அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

**அ.எண்:** 64 /2017
**தேதி:** 04.07.2017

# அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை.

"ஒரு நாடு, ஒரு வரி" என்பதன் அடிப்படையில் முடிவு எடுக்கப்பட்டு நடைமுறைக்கு வந்திருக்கும் "சரக்கு மற்றும் சேவை வரி" இந்தியாவை முன்னேற்றப்பாதையில் எடுத்துச்செல்லும் என்பதில் எந்த ஒரு மாற்று கருத்தும் கிடையாது.

பல மாநிலங்களின் வளர்ச்சிக்கு இந்த திட்டம் உதவ போகிறது என்பதை அறிகிறோம். ஆனால் அதே திட்டம், தேசத்தின் ஆண்டு வருமானத்திற்கு பெரும் பங்களிக்கும் தமிழகத்தில், சில துறைகளுக்கு குழப்பத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது என்பது உண்மை. தமிழகம் இந்த புது வரித்திட்டதால் இழக்கப்போவது என்ன, பெறப்போவது என்ன என்பது இன்னும் தெளிவாக புரியாத குழப்ப நிலையில் திரைத்துறை குறித்த இன்றைய நிலை என்னை மிகவும் வருத்தமடைய செய்கிறது.

இந்த புது வரியின் மூலம் தமிழகத்தின் ஆண்டு வருமானம் குறைவதற்கு சாத்தியக்கூறுகள் வல்லுநர்களால் விளக்கப்படும் சூழலில், தமிழக அரசாங்கம் மாநில வரிகள் மூலம் வருமானத்தை பெருக்கவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டிருக்கலாம். தமிழக அரசாங்கத்தின் பளு இந்த வரிவிதிப்பினால் அதிகப்படுத்த பட்டிருக்கலாம். ஆனால் இந்த சரக்கு மற்றும் சேவை வரிக்கு மேல், கேளிக்கை வரி போன்று ஏற்கனவே விதிக்கப்பட்டிருப்பது தொடருமாயின், 100 ரூபாய்க்கு மேல் உள்ள டிக்கெட் விலை 53% உயர்த்தப்படும்.

பலகோடிகள் முதலீடு செய்யப்பட்டு பல லட்ச குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கு அடிப்படையாக விளங்கும் திரைத்துறை இந்த வரி உயர்வினால் மிகவும் பாதிக்கப்படும் அபாயகர சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே மத்திய மாநில அரசாங்கங்கள் உடனே தலையிட்டு இத்துறையை காப்பாற்றவேண்டும்.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



வேகமாக பெருகிவரும் தொழிநுட்ப வளர்ச்சியால், நெட்ப்ளிக்ஸ், அமேசான் போன்ற டிஜிட்டல் சேனல்களின் வருகையின் மூலம், சினிமா என்ற ஒரு ஊடகம் வேறு ஒரு திசையை நோக்கி செல்வதால் இந்திய திரையுலகம் குறிப்பாக, நமது தமிழ் திரை உலகம் சவால்களை சந்திக்க உள்ளது என்பதை நாம் அனைவரும் அறிகிறோம். 100 நாட்களுக்கும் மேல் திரையிடப்பட்ட நாட்கள் கடந்து, 10 நாட்கள் திரையிடப்பட்டாலே மிகப் பெரிய வெற்றியாக கருதப்படுகிறது. இந்த வருந்தத்தக்க சூழ்நிலையில் அதன் வளர்ச்சி மட்டுமல்ல, தமிழ் சினிமாவின் குரல் வளையை நெறிப்பதுபோல வரிகளும் விதிக்கப்படுமாயின் இந்த துறையை சார்ந்த மக்களின் வாழ்க்கை தடுமாற்றம் காணும் என்பது மறுக்கப்படாத உண்மை.

நடப்பில் உள்ள வட்டி விகிதங்கள் திரைத்துறையை நசுக்கி கொண்டு இருக்கும் காலகட்டத்தில் மேலும் இந்த வரி என்ற பாரம் மூலம் இந்த துறை அபாயகரமான நெருக்கடிக்கு தள்ளப்படலாம்

நமது மாநில படைப்புகள், நாட்டிற்கே பெருமை சேர்க்கும் திறமைகள், வெற்றிகள், உலக அரங்கில் கிட்டிய, கிடைக்க இருக்கும் அங்கீகாரங்கள், வருமானங்கள், இவை அனைத்தின் எதிர்காலம் என அனைத்தையும் கருத்தில் கொண்டு மாநில அரசாங்கம் ஒரு தாய்மை உணர்வோடு கரிசனத்தோடு இப்போது இருக்கும் கேளிக்கை வரியை முழுமையாக ஆய்வு செய்து நல்லதொரு முடிவை அறிவிக்கவேண்டும்.

திரைத்துறையை சார்ந்த அனைத்து தரப்பினரும் ஒற்றுமையுடன் ஒருமித்த குரலுடன் தமிழக முதலமைச்சரிடம் முறையிட்டுள்ளனர். எனவே முதலமைச்சர் இந்த பிரச்சனையின் தன்மையை முழுமையாக அலசி ஆராய்ந்து திரை துறையினரை சார்ந்தவர்கள் வழங்கும் விளக்கங்களை சாதகமான முறையில் அணுகி நல்ல தீர்வை எட்டி இத்துறையை வாழ்விக்க வேண்டும். பல லட்ச குடும்பங்கள் வாழ உதவ வேண்டி, தேவையான நடவடிக்கையை உடனடியாக எடுக்கவேண்டும் என்று அரசாங்கத்தை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி வணக்கம்

உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com